CC.No.99/2019 (JM.No.II, DHARMAPURI)

02.06.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–7 : திரு.ஆனந்தவேலு (காவல் ஆய்வாளர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், தீவிரவாத தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2018 ம் தேதி தேதி தொப்பூர் காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசன் என்பவர் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாரிமுத்து என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்றுக் கொண்டு தொப்பூர் காவல் நிலைய குற்ற எண்.153/2018 பிரிவு 279, 337, 304 A இ.த.ச ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். பின்பு, முதல் தகவல் அறிக்கையும், புகார் வாக்குமூலத்தையும் கனம் குற்றவியல் நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பி வைத்தார். பிறகு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 12.07.2018 ம் தேதி 08.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மூர்த்தி, சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளாக LW1 – LW12 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு, இவ்வழக்கில் காயம்பட்ட தமிழ்செல்வன் இறந்துவிட்டதால் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை விசாரணை செய்து வழக்கு கோப்பினை என் மேற்பார்வைக்கு வைத்தார். நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கின் மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜாமணி அவர்களுக்கு இந்த விபத்திற்குட்பட்ட வாகனங்களான TN39V9499, TN29AM5154 என்ற வாகனங்களை தணிக்கை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். பின்பு, இவ்வழக்கின் எதிரி சோமு என்பவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட கோபிநாதன், தன்யாஸ்ரீ, ரித்தீஸ், கோவேஷ், சந்தோஷ், தனுஸ்ரீ ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தேவி என்பவரை விசாரித்து காய சான்றிதழ்களை பெற்றேன். பின்பு மருத்துவர் சாம்சுந்தர் என்பவரை விசாரித்து சுகன்யா மற்றும் தேவிக்கு காய சான்றிதழ்களை பெற்றேன். பின்பு, இவ்வழக்கின் சட்ட பிரிவுகள் 15.10.2018 அன்று 279, 337, 304 A இ.த.ச ல் இருந்து 279, 337, 338, 304 A இ.த.ச ஆக மாற்றி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு, பிரேத பாதுகாவலில் இருந்த காவலர் ஜிலான்பாஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, முதல் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் புலன் விசாரணையை முடித்துக்கொண்டு நிலையம் வந்து எதிரி சோமு மீது 279, 337, 338, 304 A இ.த.ச ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6, பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7, மோட்டார் வாகன ஆய்வறிக்கை TN39V9499 அ.சா.ஆ.8, மோட்டார் வாகன ஆய்வறிக்கை TN29AM5154 அ.சா.ஆ.9, கோபிநாதன், தன்யாஸ்ரீ, ரித்தீஷ், கோவேஷ், தனுஸ்ரீ, சுகன்யா, தேவி ஆகியோர்களின் காய சான்றிதழ்கள்**

முறையே அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11, அ.சா.ஆ.12, அ.சா.ஆ.13, அ.சா.ஆ.14, அ.சா.ஆ.15, அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பொதுவாக ஒரு நபர் இறந்துவிட்டால் புலன் விசாரணை அனைத்தும் காவல் ஆய்வாளருக்கு இணையான அதிகாரிதான் செய்ய வேண்டும் என்று Police Standing Order சொல்கிறது என்றால் சரியல்ல, காவல் உதவி ஆய்வாளரும் செய்யலாம். நான் சொல்வது தவறு என்றாலும், சட்டம் தெரியாமல் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. PSO படி விசாரணை செய்யவில்லை என்றாலும், அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. PSO சட்டம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காய சான்றிதழ் பெற்ற அனைவரையும் சாட்சிகளாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்துள்ளேன். காய சான்றிதழ் வாங்கிய 7 நபர்களையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை மீண்டும் விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு 13.07.2018 ம் தேதி சென்றேன். எனக்கு சம்பவ இடத்தை காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 அடையாளம் காட்டினார். அ.சா.6 ன் வாக்குமூலத்தில் நான் அவருடன் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், அதை அவர் அடையாளம் காட்டியதாகவும் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.6 ஐ இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக விசாரித்தேன். இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்திற்கு 26.03.2019 ம் தேதிதான் வந்தது என்றால் சரிதான். உரிய காலகட்டத்தில் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை நான் மீண்டும் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த லாரி முன்னெச்செரிக்கை சமிக்கைகள் போட்டுதான் நிறுத்தப்பட்டிருந்ததா என்று சாட்சிகள் கூறவில்லை என்றால் சரிதான். ஒரு தேசிய நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து அதிகமாக போகும்போது வாகனத்தை நிறுத்த வேண்டும் என்றால் சமிக்கைகள் போட்டுதான்நிறுத்த வேண்டும் என்றால் சரிதான். சமிக்கைகள் இல்லாமல் இரவு நேரத்தில் வாகனம் நின்றிருந்தால் வாகனம் நின்று கொண்டிருக்கிறதா அல்லது சென்று கொண்டிருக்கிறதா என்று தெரியாது என்றால் சரிதான். லாரியின் ஓட்டுனர் சமிக்கைகள் இல்லாமல் லாரியை நிறுத்தியிருந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், காரின் ஓட்டுனர் சாலை விதிகளை பின்பற்றி கவனமாகத்தான் சென்றார் என்றாலும், லாரியின் ஓட்டுனரின் கவனகுறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆவணம் தயாரிக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு அதற்கு அனுசரணையாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.02 17:20:14 +0530